Registered as a Newspaper

TOEFL GRAMMAR and Essay Writing
PRACTICE CLASSES
Time: 3 - 5 Sat / Sun.
by
S·B·IYAR
12, வைமன் வீதி,
நல்லூர்.

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

Spoken English
with
GRAMMAR
by
S·B·IYAR
புதிய பிரிவு
ஆரம்பம்: 10-02-1987
செவ்வாய் / வியாழன்
மாலை: 5 மணி - 6 மணி
12, வைமன் வீதி,
நல்லூர்.

கடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு தை மீ 26 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 9 (08-02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY இதழ் 62

★ உருத்திரபுரத்தில் காலைமுதல் இரவு வரை

# தெற்கிலிருந்து வந்த 500 சிப்பாய்களுடன் புலிகள் பெரும் போர்!

## 10 இராணுவத்தினர் பலி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 8

தெற்கிலிருந்து வந்து கிளிநொச்சியில் தங்கியிருக்கும் சிப்பாய்களில் 500 பேர் நேற்று உருத்திரபுரத்தைச் சுற்றி வளைத்தனர்.

வானத்தில் இருந்து விமானம் குண்டுவீச்சு நடத்த, உள்ளே முன்னேற முயன்ற இராணுவத்தினருடன் புலிகள் பெரும் போர் நடத்தினர்.

காலை முதல் இரவு வரை இருதரப்பாரும் கடுமையாக மோதிக்கொண்டனர். அவ்வேளை பத்துச் சிப்பாய்கள் கொலையுண்டதாகச் சொல்லப்படுகிறது.

புலிகள் தரப்பில் ஒன்பது பேர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது.

நேற்றுக் காலை எட்டு மணியளவில் கிளிநொச்சி முகாமில் இருந்து ஐநூறுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் உருத்திரபுரம் நோக்கி நடைபவனி மேற்கொண்டனர்.

அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குமுகமாக குண்டுவீச்சு விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் வானில் பறந்து திரிந்தன.

கரடிப்போக்கு சந்தியை சிப்பாய்கள் அடைந்ததும் புலிகள் ரொக்கட், மோட்டோர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத் தாக்குதல்களில் நான்கு சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர் எனச் சொல்லப்படுகிறது.

இதனையடுத்து குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல் நடத்தின.

குண்டுவீச்சு தாக்குதல் மத்தியிலும் விடுதலைப் புலிகள் சிப்பாய்களுடன் கடும்சமர் புரிந்தனர்.

தொடர்ந்தும் முன்னேறி வந்த சிப்பாய்கள் உருத்திரபுரம் வரை வந்து மாலையிலும் சமர் நடத்திக் கொண்டிருந்தனர்.

புலிகள் நடத்திய தாக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வழமைக்கு மாறாக ரோந்து வந்த சிப்பாய்கள் மீது புலிகள் கனன்சார்ஜ் தாக்குதல்

பலாலி, பெப், 8

பலாலி இராணுவ முகாமில் இருந்து வழமையாக சனி, செவ்வாய்கிழமைகளில் நடைபவனியாக வரும் சிப்பாய்கள் வழமைக்குமாறாக நேற்றுப் பிற்பகல் 4-30 மணி அளவில் வந்தனர்

இவர்கள் மீது விடுதலைப் புலிகள் கனன் சார்ஜ் தாக்குதலை மேற் கொண்டனர்.

இதில் சில சிப்பாய்கள் அகப்பட்டிருக்கலாமெனநம்பப்படுகின்றது.

கனன் சார்ஜ் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அவ்விடத்தில் வந்த ஏனைய சிப்பாய்கள் படுத்திருந்தபடி சுற்றுப் பகுதிகளை நோக்கி சுமார் 30 நிமிட நேரம் சுட்டுக்கொண்டிருந்தனர்.

ஹெலி பாதுகாப்பளிக்க பிற்பகல் 6.30 மணி அளவில் அவர்கள் முகாமுக்குத் திரும்பினர்.

(இ-119)

ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்
வாடிக்கையாளருக்கு
வேண்டுகோள்

எமது நிதி நிறுவனத்தில் செலுத்தப்பட்ட வைப்புப் பணத்திற்கான வட்டியை யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள தமது கணக்கில் இடுவதற்கு பல வாடிக்கையாளர்கள் அனுமதி வழங்கியிருந்தனர்.

அத்தகைய வாடிக்கையாளர்கள் தங்கள் வைப்புப் பணத்திற்குரிய வட்டித்தொகையை தற்பொழுது காசோலையாக எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத்தருகிறோம்.

— நிர்வாகிகள்

முச்சந்தி முரளி



சவலையைத் தெரிவிச்சுச் தெரிவிச்சு அவை காலங்கடத்தட்டு, இவை பேச்சுவார்த்தை என்டு காலம்கடத்தட்டு. இரண்டுக்கும் நல்ல தோதாயிருக்கும்......!

### ★ விமானங்கள் சுடப்படும் என்கிறது அரசு

கொழும்பு, பெப். 8

பாரமில்லாத பெரிய விமானங்கள் வான் பிராந்தியத்தில் பறப்பதை இலங்கை அரசு தடை செய்துள்ளது

அப்படிப் பறக்கும் விமானங்கள் சுட்டுத் தள்ளப்படும் என்று அரசு விடுத்த அறிக்கை ஒன்றில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது (இ-எ)

### ஹெலி நோட்டமிட்டது

கொக்குவில், பெப், 8

கொக்குவில், கோண்டாவில், நந்தாவில் பகுதிகளை நேற்றுப் பிற்பகல் 3-30 மணி அளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டது.

(இ-69)

## மத்தியஸ்தம் தொடர இந்தியா நிபந்தனை

### இலங்கைத் தூதரை அழைத்து நட்வர்சிங் தெரிவித்தார்

புதுடில்லி பெப் 7

இனப்பிரச்சினையில் தொடர்ந்து மத்தியஸ்தம் செய்ய இந்திய அரசு இலங்கைக்கு நிபந்தனைகள் விதித்துள்ளது.

● யாழ் குடாநாடு மீது விதிக்கப்பட்ட பொருளாதாரமுற்றுகை நீக்கப்படவேண்டும்.

● தமிழர்மீதான வன் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

● கடந்த டிசம்பர் 19இல் ஜனாதிபதி ஜெயவர்த்தன இணை அமைச்சர்களிடம் அளித்த உறுதிமொழி காப்பாற்றப்பட வேண்டும்.

இவையே இந்திய அரசு விதித்த நிபந்தனைகள்.

நேற்று வெளியுறவு அமைச்சுக்கு புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்ன அழைக்கப்பட்டார்.

அவரிடம் இந்த நிபந்தனைகளை இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் எடுத்துச் சொன்னார்.

இவைநிறைவேற்றப்பட்டால்தான் பேச்சுக்கள்மூலம் அமைதித் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சிகளை இந்திய அரசினால் முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் இணை அமைச்சர் இலங்கைத் தூதரிடம் வலியுறுத்திக் கூறினார். (இ-எ)

### வாகனங்களை திருப்பி அனுப்பினர்

யாழ்ப்பாணம், பெப் 8

வெளியூர் நோக்கிப் புறப்பட்ட சகல வாகனங்களும் நேற்று போராளிகளினால் குடாநாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன,

இதேவேளை சிப்பாய்களும் ஒலி பெருக்கி மூலம் வாகனங்கள் கிளிநொச்சிப் பகுதி செல்லக் கூடாது என அறிவித்தனர்.

நேற்று கிளிநொச்சிப் பகுதியில் நடைபெற்ற மோதல்கள் காரணமாகவே வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன.

எனினும் கொழும்பில் இருந்து வந்த பல தனியார் பஸ்களை புளியங்குளத்தில் சிப்பாய்கள் மறித்து வைத்து பல மணி நேரத்தின் பின் விடுவித்தனர் அவை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன,

ஆனையிறவு முகாமிலும் சிப்பாய்கள் வாகனங்களைச் சோதனையிடுவதில் அதிக அக்கறை காட்டாமல் கூடிய விரைவில் வாகனங்களைக் குடாநாட்டுக்குள் அனுப்பி வைத்தனர். (இ-10)

## இந்தியா கவலை

புதுடில்லி, பெப். 8

பொருளாதாரத்தடை, இராணுவத் தாக்குதல்கள் மூலம் அப்பாவித் தமிழரைக் கொல்வது, தொல்லை கொடுப்பது குறித்து இந்தியா தனது தீவிர கவலையை இலங்கை அரசுக்குத் தெரிவித்து உள்ளது.

இந்தியாவின் கவலையை ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் நேரில் தெரிவிக்கும்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. டிக்ஸித் நேற்று முன்தினம் பணிக்கப்பட்டார்.

நேற்று கொழும்பு திரும்பிய இந்தியத் தூதர், ஜனாதிபதியை உடனடியாகச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

பொருளாதாரத் தடை, அப்பாவித் தமிழர்களை தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் கொலை செய்வது ஆகியன இலங்கை அரசுக்கு மிகவும் கவலை அளித்துள்ளது என்று இணை அமைச்சர் நட்வர் சிங் இலங்கைத் தூதரிடம் தெரிவித்தார்.

இந்தச் செயல்களை தொடர்ந்து அனுமதிக்க முடியாது அப்படி அனுமதிப்பது பொதுமக்கள் மத்தியில் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தும் என்றும் இணை அமைச்சரினால் இலங்கைத் தூதரிடம் விவரிக்கப்பட்டது.

(இ-எ)

### சுபநேரம்

08-02-1987
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9. 35 முதல் 11.05வரை
ராகுகாலம்:
5 05 முதல் 6.35 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## சிப்பாய்கள் மறைத்துவைத்த குண்டில் சிக்கினர் இருவர்

### கட்டுவனில் ஒருவர் காலை இழந்தார்

பலாலி, பெப். 8

நேற்று முன்தினம் கட்டுவன் சந்திக்கு அண்மையில் புலிகளுடன் சமர் செய்து பின்வாங்கிய சிப்பாய்கள் மறைத்து வைத்துவிட்டுச் சென்ற குண்டு வெடித்து ஒருவர் தமது வலது காலை இழந்தார். மற்றுமொருவர் பலத்த காயம் அடைந்தார்

கட்டுவனைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சாந்தகுமார் (வயது 20) என்பவரே காலை இழந்தவர் ஆவார்.

கட்டுவனைச் சேர்ந்த எஸ். பாலசுப்பிரமணியம் தலையில் காயம் அடைந்தார்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

(4ஆம் பக்கம் பார்க்க)

### சைக்கிளில் சென்றவருக்கு சூடு!

யாழ்ப்பாணம், பெப். 8

கொட்டடிச் சந்தியைக் கடந்து செல்லும் பொது மக்கள் மீது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர்.

நேற்று சைக்கிளில் சென்ற ஒருவர் மீதும் சிப்பாய்கள் சுட்டனர்.

இதன் காரணமாக அவர் கையில் காயமடைந்தார்.

தம்பையா பிரேம்குமார் (24 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (இ-10)

வயாவிளானில்

## பனைவெளிகளூடாக வெளியேறுவதற்கு முயன்ற சிப்பாய்கள்

பலாலி, பெப். 8

நேற்று மாலை மூன்று மணி அளவில் வயாவிளான் மகாவித்தியாலயத்துக்கு தெற்காகவும், வடக்காகவும் உள்ள பனைவெளிகளுக்குள் சிப்பாய்கள் வந்து பனைகளுக்குள் மறைந்து முன்னேறும் முயற்சியை மேற்கொண்டனர்.

குறிப்பிட்ட அவ்விடத்துக்கு விரைந்த விடுதலைப் புலிகள் 'கிறனேற்' எறிந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் தாக்குதல் நடத்தினர்.

துப்பாக்கி வேட்டுக்களை மட்டும் தீர்த்த சிப்பாய்கள் பனைகளுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஈழமுரசுக்கு வாழ்த்து

ஈழமுரசு பத்திரிகை தனது மூன்றாவது ஆண்டைப் பூர்த்தி செய்து நான்காவது ஆண்டில் இம்மாதம் ஐந்தாம் திகதி காலடி வைத்தது.

ஈழமுரசு மூன்றும் ஆண்டு நிறைவு மலர் இன்று வெளியாகி உள்ளது.

அதனையொட்டி அப்பத்திரிகையின் பணி மேலும் சிறக்க உதயன் -- சஞ்சீவி -- அர்ச்சுனா குடும்பம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

— பிரதம ஆசிரியர்

## மன்னாரிலும் பெரும் மோதல்

யாழ்ப்பாணம், பெப். 8

மன்னார், தள்ளாடி இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய சிப்பாய்கள் மாந்தை பண்டிவிரிச்சான், நானாட்டான், பரப்புக்கண்டல் ஆகிய பகுதிகளுக்கு சென்றபொழுது புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

வெள்ளிக்கிழமை தொடங்கிய நடைபவனியும், புலிகளின் தாக்குதலும் நேற்றும் இப்பகுதியில் தொடர்ந்து கொண்டிருந்தன.

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து பரப்புக்கண்டல் பகுதிக்கு விரைந்த 50க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டனர்.

இதில் பல சிப்பாய்கள் பலியாகியிருக்கலாம் என புலிகள் தெரிவித்தனர்.

இதேவேளை மாந்தையிலும், பண்டிவிரிச்சானிலும் புதிய முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது

புலிகள்-சிப்பாய்கள் நேரடிச் சமரின் போது ஹெலிக் கொப்டர்களும் இப்பகுதியில் தாக்குதல் நடத்தின.

(இ-10)

### யாழ் நகரில் சுவிஸ் பத்திரிகையாளர்

யாழ்ப்பாணம், பெப். 8

சுவிஸ் பத்திரிகையாளர்கள் இரண்டு பேர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்

யாழ். நிலைமையை நேரில் காண வந்துள்ள இப் பத்திரிகையாளர்கள் இன்று ஞாயிறு மாலை 4 மணி வரை ஹோட்டல் ஞானம்ஸில் தங்கி நிற்பர்.

சுவிஸ் நாட்டில் இருந்து பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்டு யாழ் வந்துள்ள தமிழர்களைச் சந்திக்க இப்பத்திரிகையாளர்கள் விருப்பம் தெரிவித்து உள்ளனர்.

எனவே அப்படி சுவிஸில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் இப பத்திரிகையாளர்களை ஹோட்டல் ஞானம்ஸில் இன்று ஞாயிறு காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சந்திக்கலாம் என்று பிரசைகள் ஒன்றியணைப்புக் குழு இணைப்புச் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

சுவிஸ் பத்திரிகையாளரைச் சந்திப்பது பல நன்மைகளுக்கு வழிவகுக்கும் எனவும் கூறி அவ்வாறு செய்யுமாறு வேண்டுகோளும் விடுத்துள்ளார். (இ-ம)

மங்களகரமான
புதுக் கடைத்
திறப்பு விழா

'சௌபாக்கியாஸ்'
CHOWBAKIYAS

நிகழும் அக்ஷய வருஷம் தைத்திங்கள் 27-ம் நாள் 09 - 02 - 1987 திங்கட்கிழமை காலை 11 - 00 மணி முதல் 12 · 00 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மேற் குறிப்பிட்ட ஜவுளி மாளிகையை திறந்து வைக்க நிச்சயித்துள்ளோம்.

அத்தருணம் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

22(63), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

**காணவில்லை**

613481052 V இலக்கமுடைய எனது அடையாள அட்டை யாழ் நகரில் ஒரு பையுடன் தவற விடப்பட்டு விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறேன். க. குமணன், 49/3, மணற்தறை ஒழுங்கை, திருநெல்வேலி.

**சேவை**

தினசரி எங்களுடைய ஸ்தாபனம் இரவு 8 45 வரை திறந்திருக்குமென அறியத் தருகின்றோம். யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற். 124, RR நல்லையா வீதி முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி 23460.

**தேவை**

நல்ல நிலையில் பஜாஜ் ஸ்கூட்டர். இராமச்சந்திரன், யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற், 124 RR நல்லையா வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23460

**வகுப்புகள்**

க.பொ.த உயர் (89) கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம் 09-02-1987 மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி.

**ஏல விற்பனை**

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வீதி, 'ரூஜ் பேலஸ்' திரு. ஆ சக்திவடிவேல் அவர்களிடம் 1-8-1984 தொடக்கம் 31-8-1985 வரை அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 28-2-1987 காலை ஒன்பது மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து விற்கப்படும். கே இராஜகோபால், ஏல விற்பனவாளர். வண்ணார் பண்ணை.


பகைமையும் மனக்கசப்பும்

# தமிழ், முஸ்லிம் மக்களை அழிவுக்கே இட்டுச் செல்லும்

## பிரதி அமைச்சர் மஜீத் எச்சரிக்கை

அம்பாறை, பெப். 8 தமிழ் - முஸ்லிம் மக்கள் பகைமையையும் மனக்கசப்பையும் வளர்த்துக்கொண்டு ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்கொண்டு நோக்கினால் நாம் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லப்படுவோம்.

பிரதி தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சரும், சம்மாந்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் எம். ஏ அப்துல் மஜீத் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

கல்முனை மாவட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி, பதவி உயர்வுடன் கண்டி பெரியாஸ்பத்திரிக்கு இடமாற்றம் பெற்றுள்ள டாக்டர் திரு. என். சலாக்கியநாதனுக்கு பிரிவுபசார வைபவம் ஒன்று நடத்தப்பட்டது.

கல்முனை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் நடத்தப்பட்ட இந்த வைபவத்தில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி வீ. சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பிரதி அமைச்சர் ஜனாப் அப்துல் மஜீத் மேலும் பேசுகையில்;

கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் இன்று தலில் நிலையில் அல்லலுற்று வருகின்றனர், அவர்கள் அடைந்து வரும் துன்பங்களும், துயரங்களும் பெரும் மனவேதனையைத் தருகின்றன

யாழ் குடாநாட்டு மக்களுக்கு இருக்கும் சிறு நிம்மதிகூட இன்று கிழக்கிலங்கைத் தமிழ் மக்களுக்கு இல்லை.

இந்த அவலம் இன்னும் நீடிக்கக்கூடாது விரைவில் ஒரு சமாதானத் தீர்வு வரவேண்டும்.

இன்றைய நிலையில் கிழக்குவாழ் தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்கிடையே ஒற்றுமையையும், பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் வளர்த்து வேரூன்றச் செய்யவேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-14)

### அச்சுவேலியில் அதிபர்கள் கூட்டம்

அச்சுவேலி, பெப் 8 கோப்பாய் கல்வி வட்டாரத்தில் உள்ள பாடசாலை அதிபர்கள், கொத்தணி அதிபர்கள் ஆகியோரை யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம் எம் மன்சூர் அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தியாலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சந்திக்கின்றார்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஏ வி. தங்கராசா தலைமையில் நடைபெறும் இந்த அதிபர்கள் கூட்டத்தில் புதிய கல்விப் பணிப்பாளர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவார். (இ-11)

### பனம்பொருள் கைப்பணி பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 8 இருபாலை பாரதி கலாமன்ற மாதர் அணியினருக்கான பனம்பொருள் கைப்பணி பயிற்சி வகுப்புக்கள் திங்கட்கிழமை காலை ஆரம்பமாகும் செய்யப்படஉள்ளன.

பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் அனுசரணையுடன் கோப்பாய் லயன்ஸ் கழகம் இதனை நடத்தும்.

இருபாலைச் சந்தி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கவிற்பனை நிலைய மேல் மாடியில் இப்பயிற்சி வகுப்புகள் இடம்பெறும்

பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு க. நடராசா சிறப்புரை நிகழ்த்துவார். (இ-எ)

### ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், பெப் 8 யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் வங்கிக் கிளைகள் மூலம் மலேசியா, சிங்கப்பூர் அரசாங்க ஓய்வூதியம் பெறுவோருக்கான ஜனவரி ஓய்வூதியம் காசோலை மூலம் 10-ம் திகதி கச்சேரியில் வழங்கப்படும்.

ஓய்வூதியர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடனும் பூரணப்படுத்தப்பட்ட அம் மாதத்துக்குரிய ஓய்வூதியப் பற்றுச் சீட்டுடனும் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர் (இ-10)

## அடிப்படை சுகாதார அறிவின்மையே அடிக்கடி வைத்தியசாலை செல்ல காரணம்

சாவகச்சேரி, பெப். அடிப்படைச் சுகாதார அறிவின்மையாலேயே நாம் எடுத்ததற்கெல்லாம் வைத்தியசாலைகளை நாடுகிறோம். மேலைநாடுகளில் பெரிய சிகிச்சைகளுக்கும் மனநோய் போன்றவற்றுக்குமே மக்கள் வைத்தியசாலைக்குச் செல்கின்றனர்.

அறவழிப் பணி மனையில் இடம்பெற்ற 'மனித வாழ்வும் சுகாதாரமும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கை ஆரம்பித்து வைத்த தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் திரு. எம். பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வதேச சமாதான சேவை இயக்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கிற்கு அதன் தலைவர் திரு வி. எஸ். துரைராசா தலைமை வகித்தார்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து 60 க்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்குபற்றிய இக்கருத்தரங்கில் திரு. பொன்னம்பலம்

(4 ஆம் பக்கம் பார்க்க)


**விற்பனைக்கு: Deep-Freezers**

Deep-freezers (Horizontal and Vertical types) சிறியனவும், பெரியனவும் உத்தரவாதத்துடன் நல்ல நிலையில் விற்பனைக்குள்ளன விபரங்களுக்கு dyn ads, 476, பிரதான வீதி. கண்டுக்குளி (சென்ற். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக).


நாய்களால்

## பொதுக் கிணற்றில் தண்ணீர் அள்ள பொதுமக்கள் மறுப்பு

வட்டுக்கோட்டை, பெப் 8 அராலி வடக்கிலுள்ள நல்ல தண்ணீர்க் கிணற்றில் சுமார் நான்கு மாதங்களாக பொதுமக்கள் தண்ணீர் அள்ளாத நிலை நீடித்து வருகின்றது

கிராம சபையினால் அமைக்கப் பட்ட இந்த பொதுக் கிணற்றில் ஒரு பகுதியினரே ஆரம்ப காலம் முதல் தண்ணீர் அள்ளி வந்தனர் பின்பு அராலி வடக்கிலுள்ள சகல பகுதி மக்களும் தண்ணீர் அள்ளி வந்தனர்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் இங்குள்ள நாய்கள் கிணற்றினுள்ளும் சுற்றுப்புறங்களிலும் அசுத்தப்படுத்தியதை அடுத்தே தற்போது பொதுமக்கள் இக்கிணற்றில் தண்ணீர் அள்ளுவதை நிறுத்தியுள்ளனர்.

அபிவிருத்திச்சபை அராலி உப அலுவலகமாவது இக்கிணற்றைச் சுத்தப்படுத்தி பொதுமக்கள் பயன்படுத்த உதவ மாட்டாதா எனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இக்கிணற்றில் தண்ணீர் அள்ளுவதை நிறுத்தியதன் பின்னர் பைப்புகளில் தண்ணீர் எடுக்கும் போது பெரும் பிரச்சினைகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன என்றும் கூறப்படுகிறது. (இ - 161)

மக்கள் முகம்

### சங்கத்தானை சன சமூக நிலையம்

சாவகச்சேரி, பெப். 8 சாவகச்சேரி சங்கத்தானை சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்;- திரு. வ. க. சிவக்கொழுந்து, உபதலைவர்:- திரு. த. இராமலிங்கம், செயலாளர்:- திரு. சி. கந்தையா, உபசெயலாளர்:- திரு க. உருத்திரகோமேஸ்வரன், பொருளாளர்:- திரு மு. கதிரேசு, கணக்காய்வாளர்;- திரு க. சண்முகநாதன் (இ-31)

### சேவை நலன் பாராட்டு விழா

சாவகச்சேரி, பெப் 8 கடந்த ஏழாண்டுகளாக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி கிளிநொச்சிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு க. துரைராசாவுக்கு இன்று 8 ஆம் திகதி சேவைநலம் பாராட்டு விழா நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

கெற்பலி நலன்புரிச் சங்கம் நடத்த இருக்கும் இவ்வைபவம் திரு அ. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறும் (இ-31)

### ஷூல்ட்ஸுடன் ஹமீத் பேசுவார்

கொழும்பு, பெப். 8 வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஷாஹுல் ஹமீது நேற்று அமெரிக்கா சென்றார்

இருதரப்பு உறவுகள், சர்வதேசப் பிரச்சினைகள் குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷூல்ட்ஸுடன் இவர் பேச்சுக்களை நடத்துவார் என்று அறிவிக்கப் பட்டது. (இ-எ)

11 ஆம் திகதி நடக்கும் பேரணியில்

## சனசமூகநிலையங்களின் சமாசமும் கலந்துகொள்ளும்

யாழ்ப்பாணம், பெப் 8 எரிபொருள் தடையை எதிர்த்து மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் இம்மாதம் 11ஆம் திகதி நடத்தும் பேரணியில் கலந்து கொள்வது என்று யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் தீர்மானித்துள்ளது.

சமாசத்தில் அங்கம் வகிக்கும் சகல சனசமூக நிலையங்களும் இந்தப் பேரணியில் கலந்து கொள்ளும்படி சமாசச் செயலாளர் திரு. இ. தவகோபால் கேட்டுள்ளார். (இ-எ)

ஷெல் காரணமாக

## வியாபாரிமூலையிலிருந்து வெளியேறிய அகதிகள்

கரவெட்டி, பெப் 8 பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் காரணமாக வியாபாரி மூலைப் பகுதியிலிருந்து வெளியேறியவர்களில் 69 பேர் அரசடி மிஷன் பாடசாலையிலும் 72 பேர் தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் 13 பேர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் தஞ்சமடைந்தனர்.

இவர்களுக்கான உடனடி உணவுத் தேவைகளை நெல்லியடி பிரஜைகள் குழு உறுப்பினர்கள் உள்ளூர் மக்களின் உதவியுடன் பூர்த்தி செய்து வருகின்றனர். (இ-70)


**முதல் வருட நினைவஞ்சலி**



**செல்வன் கந்தசாமி மயூரன் (பாபு)**

தோற்றம்:- 18-04-1978 மறைவு:- 20-01-1986

திதி:- 08-02-1987

அருக துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு, ஆறுதலைத் தேடிவிட்ட எங்கள் மைந்தா, வாடுகிறோம் நீ வாழ்ந்த நாளை எண்ணி, வருடம் ஒன்று போனதையா, உன் வதனம் மறைந்து. அக்காமார், அண்ணாமார் அருகிருக்க அன்புடைய பெற்றோரும் துணையிருக்க, விண்ணகம் சென்றாயோ வீரமைந்தா! என்றாலும் எம் இதயம் உம் நினைவில் வாடுதையா.

உன் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டும், பெற்றோர், சகோதர சகோதரிகள், மைத்துனர்,

23/7, முதலியார் லேன், நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

**வியாபாரத் துறையில் முதலீட்டுக்கான வாய்ப்பு**

நீண்டகால நலனில் அக்கறை கொண்டு முதலிட விரும்புவோருக்கு வியாபாரத் துறையில் ஸ்திரமான வாய்ப்பொன்று உள்ளது. சில்லறை விற்பனை நிலையமொன்றையும், பிரபலமான வர்த்தகச் சின்னத்துடன் கூடிய உணவுப் பொருள் உற்பத்திப் பிரிவொன்றையும், பெறுமதி வாய்ந்த ஏஜென்சி உரிமைகளையும் கொண்ட ஸ்திரமான நிறுவனமொன்றைப் பொறுப்பேற்கும் வகையில் முதலிடத்தக்க ஒருவரையோ அல்லது பங்குதாரர்கள் சிலரையோ நாம் தேர்ந்தெடுக்க விரும்புகின்றோம். ஆர்வமுள்ளவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

BUSINESS PROMOTERS (PVT) LTD, First Floor, 198 (76), Kasturiar Road, JAFFNA.

**பிரயாண ஒழுங்குகள்**

● ஓமான் ● குவைத்

ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புபவர்கள் உடன் எம்மிடம் நேரில் தொடர்புகொள்ளவும்

எமது முகவர் நிலையத்தினூடாக கடந்த வாரம் பயணம் மேற்கொண்டவர்களின் பெயர் விபரங்களை வெளியிட்டிருந்தோம். இவ்வாரம் 07-02-87 பயணம்மேற்கொண்டோரின் விபரங்கள்.

1 சந்தையா ஞானசூரியர், கொக்குவில் மேற்கு கொக்குவில்
2 வைத்தி யாகோப் செல்வஜீவதாஸ் வட்டாரம் 5, புதுக்குடியிருப்பு.
3 சண்முகம் பாஸ்கரன், வாட் நம்பர் 6, புதுக்குடியிருப்பு.
4 பரராசசிங்கம் குணசீலன், வாட் நம்பர் 6, புதுக்குடியிருப்பு.
5 தேவரத்தினம் தயாபரன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
6 ஜேம்ஸ் பவுஸ்ரின் இராசநாயகம், இளவாலை மேற்கு, இளவாலை.
7 வீரவாகு பரஞ்சோதி, நந்தாவில், கொக்குவில்.
8 கந்தையா ரவீந்திரதாஸ், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
9 இராசலிங்கம் விஜேந்திரன், 145 கண்டிக்குளி ரோட், கொழும்புத்துறை.
10 சுப்பிரமணியம் ராஜேந்திரன், 340. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
11 ரட்ணசிங்கம் பகீரதன், வல்வெட்டித்துறை.

எமது முகவர் நிலையத்தினூடாக பயணம் மேற்கொள்வோரின் பெயர் விபரங்களை வாரந்தோறும் வெளியிடுகிறோம்; எமக்கு வட பகுதியில் வேறுகிளைகள் இடையாது

யாழ் முகவர்: A. பத்மதாஸ் மதுரா வீடியோகிளப், இல 96, 4-ம் குறுக்குத் தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23549

கொழும்பு முகவர்: HORIZON ENTERPRISES No 87 2/1, Kollupittiya Lane, Kollupittipa, COLOMBO-3. T-phone: 574000

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### சிகரெட் பணம் திருட்டு

புங்குடுதீவு, பெப் 8 நள்ளிரவில் கூரை ஓடுகளைப் பிரித்துக் கடை ஒன்றுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து 5 பெட்டி சிகரெட் பைக்கட்டுக்களையும், சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான சில்லறை நாணயங்களையும் எடுத்துச் சென்றனர்.

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தின் முன்பாக உள்ள கடை ஒன்றிலேயே இத்திருட்டு நடந்துள்ளது

இத்திருட்டு தொடர்பாக இளைஞர் இயக்கமொன்று தற்போது புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளது. (இ-131)

## குழந்தைகள் சீராக வளர்க்கப்பட்டாலேயே நாட்டுப்பற்று ஏற்படும் புலிகள் பிரமுகர் கூறுகிறார்

மானிப்பாய். பெப் 8 ரஷ்யர்கள் குழந்தைப் பராயத்தில் சீராக வளர்க்கப்படுவதாலேயே நாட்டுப்பற்று, ஒழுக்கம் ஆகியவை அவர்கள் மத்தியில் திகழ்கின்றன.

விடுதலைப் புலிகள் இயக்க மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. மயூரன் மேற்கண்டவாறு கூறினார்.

மானிப்பாய் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் அமைக்கப்பட்ட தியாக சீலம் சிறுவர் பூங்கா திறப்புவிழா வைபவத்தில் திரு. மயூரன் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசியதாவது; கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், கல்வியாளர்கள், பொது மக்கள் ஆகியோர் இன்று பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் உள்ளபோது இது போன்ற கேளிக்கைகள் அமைவது அவசியமா எனப் பலர் நினைக்கலாம்.

இது கேளிக்கை அல்ல. விருந்துபசாரமும் அல்ல. இன்றைய கால கட்டத்துக்கு அவசியமானது என்பதை உணர்ந்தே இதைத் திட்டமிட்டுச் செய்கின்றோம்.

குழந்தைகளின் வளர்ச்சிதான் நாட்டின் வளர்ச்சி. குழந்தைகள் சீராக வளர்க்கப்படுவதால்தான் ரஷ்யாவில் மக்கள் நாட்டுப்பற்று, ஒழுக்கு ஆகியவற்றைக் கடைப்பிடிக்கிறார்கள்.

அதேபோல நாமும் வாழ செயல் திட்டங்களை அமைத்து வருகின்றோம்.

இப்படி அவர் கூறினார். (இ-90)

### அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8 தெல்லிப்பளை ப. நோ. கூ சங்கத்தினர், தெல்லிப்பளை துர்க்காதேவி அன்னை இல்லச் சிறுவர்களுக்கான சீருடைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (இ-5)

# அக்னி ஹோம யாகத்தை கடைப்பிடிக்க யாழ்மக்கள் ஆர்வம்

## கொழும்பு திரும்பு முன் பேராசிரியர் முலே தகவல்

யாழ்ப்பாணம், பெப். 8 அக்னி ஹோம யாகத்துக்கு யாழ் மக்கள் நல்ல வரவேற்பளித்தனர். அதனை வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்தியாவில் உள்ள சர்வதேச ஹோம சிகிச்சை ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ் ஜி முலே மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த ஒரு மாத காலமாக யாழ்குடா நாட்டில் தங்கியிருந்து ஹோம சிகிச்சை பற்றி விரிவுரைகளை நிகழ்த்தி வந்த பேராசிரியர் முலே கொழும்பு சென்றுள்ளார்.

அதற்கு முதல் பேராசிரியர் முலே, உதயன் அலுவலகத்துக்கு வந்து, தமது விஜயம் வெற்றி பெற பத்திரிகைகள் தந்த உதவிக்கு நன்றி தெரிவித்தார்.

இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்தவர் பேராசிரியர் முலே.

அவர் மேலும் சொன்னதாவது;-

ஹோம சிகிச்சை பற்றிய கூட்டங்கள் 75க்கு மேல் யாழ் குடாநாட்டில் நடத்தப்பட்டன. ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.

சாதாரண மக்களில் இருந்து படித்தவர்கள் வரை ஹோம சிகிச்சை முறையை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார்கள். பலர் [illegible] இந்த முறையை அனுட்டிக்கத் தொடங்கி விட்டார்கள்.

இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று. யாழ்ப்பாணத்தில் நிலவும் நிலை மற்றது ஹோம சிகிச்சை யாகத்தை மிக இலகுவான முறையில் மேற்கொள்ளக் கூடியதாக இருப்பது.

சூழலைச் சுத்தப்படுத்த ஹோம யாகம் உதவுகிறது என்பதை பரவலாக அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள்-

இப்படிக் கூறிய பேராசிரியர் முலே 'யாழ் மக்கள் மனச்சாந்தியும் சுபீட்சமும் பெற்று வாழ வாழ்த்துகிறேன்'- என்று கூறி விடைபெற்றார் (இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

அன்பிலே பயம் இல்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது. பயப்படுகின்றவன் அன்பிலே பூரணப்பட்டவன் அல்ல.

— பைபிள்

உதயன்
உண்மை - நிதானம் - நடுநிலைமை
இல,15,2ஆவதொழுங்கைதொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 08-02-1987 த.பெ.இல. 23

## நல்ல சந்தர்ப்பம் இது.

இலங்கையில் தமிழர்கள் அரசாங்கப் படைகளால் சுட்டுக் கொல்லப்படுவதும், சித்திரவதை செய்யப்பட்டு மரணிப்பதும் சர்வ சாதாரணம்.

படைகள் வரம்பு மீறி நடக்கின்றன. அட்டகாசம் புரிந்து அடாவடித்தனம் செய்து தமிழர்களைக் கொல்கின்றன என்பது ஜனாதிபதி மட்டம் வரை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

போராளிகளுடன் போராடுவதாகக் கூறி, அவர்களைக் கொல்வதாகச் சொல்லி, அப்பாவித் தமிழரைப் படைகள் கொன்று குவிக்கும்போது, கொலையுண்டவர்கள் எண்ணிக்கையை ஒருவாறு கணக்கில் வைக்க முடிகின்றது.

அப்படிக் கணக்கில் வைத்ததில் அரச பயங்கரவாதத்துக்குக் கடந்த நான்கு வருடங்களில் 12,479 தமிழர்கள் இரையாகி இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது

அவர்களைத் தவிர அரசாங்கப் படைகளால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமற் போனோரும், படைகளின் தாக்குதலின் போது காணாமற் போனோருமாகப் பெரும் எண்ணிக்கையான தமிழர்களின் கதி தெரியாது.

கொக்கட்டிச்சோலைச் சம்பவங்கள் போன்ற அரச பயங்கரவாதப் படுபாதக நடவடிக்கைகளின் போது, வீடுகளில் இருந்த போதும், வயல்களில் வேலை செய்த போதும், தொழிற்சாலைகளில் பணி புரிந்த போதும் காணாமற்போன தமிழர்கள் நிலையும் தெரியாது.

எனவே 'காணாமற் போன' தமிழர்களின் சரியான கணக்கை வைக்க முடியவில்லை. படைகள் கைது செய்த பின்னர் காணாமற் போன தமிழர்கள் மட்டும் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் 326 என்று சர்வதேச மன்னிப்புச் சபையால் கணக்குக் காட்டப்பட்டது

1985 டிசம்பரில் இது பற்றிய அறிக்கை வெளியிடப்பட்டது. இலங்கை அரசாங்கத்துக்கும் அறிவிக்கப்பட்டது. இலங்கை அரசு அதனை ஆதாரமற்றது என்று அலம்பல் செய்தது. எனினும் மன்னிப்புச்சபை விட்டுவிடவில்லை. மீண்டும் 1986 ஏப்ரலில் காணாமல் போனவர்கள் சம்பந்தமான சத்தியக்கடதாசிகள், முழு விவரங்கள் சகிதம் மிக ஆதார பூர்வமான அறிக்கையை வெளியிட்டது.

இலங்கை அரசு ஒப்புக்கொள்ளவில்லை. உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மன்னிப்புச் சபையை பொய்யாக்க முயன்றது

காணாமற் போனவர்களின் உறவினர்கள் இலங்கைப் பொலிஸில் முறையிடலாம் என்றும், வழக்குத் தொடரலாம் என்றும் வம்பு வாதம் புரிந்தது. கள்வனையே நீதிவானுக்கும் கதை கூறிவந்தது

எல்லாவற்றுக்கும் மேலாக சர்வதேச மன்னிப்புச் சபை அதிகாரிகளுடன் வாதம் நடத்தவும் அரசாங்கப் பிரமுகர் ஒருவர் முனைந்தார்; மூக்குடைபட்டார்!

காணமற்போன 326 தமிழரில் 5 பேரைத் தவிர ஏனையோருக்கு என்ன நடந்தது என்பது குறித்து விளக்க முடியாத நிலையில் இலங்கை அரசு இருப்பதாக ஐ. நா. குழு ஒன்று இப்போது தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு நியமித்த விசேஷ செயற்குழு ஒன்று இதுசம்பந்தமான தகவலைத் தந்திருக்கிறது. சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையை ஊர்ஜிதம் செய்வதாகவே இத்தகவல் அமைந்திருக்கிறது.

ஐ. நா. குழுவின் அறிக்கை ஐ. நா. பிரதான பொதுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இலங்கையில் நடக்கும் அட்டூழியம் உலகளாவிய ரீதியில் எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர் நிலையை சர்வதேச அரங்கில், அகில உலக ரீதியில் எடுத்துக் கூற இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். தமிழர் பிரச்சினையை உத்தியோக ரீதியாக ஆதார பூர்வமாக எடுத்துச் சொல்ல இது ஓர் ஆரம்பக் கருவாக அமைய வேண்டும்.

காணாமற்போனவர்கள் விவகாரத்தை அடுத்து, அப்பாவி மக்கள் எப்படி எப்படி எல்லாம் கொல்லப்படுகிறார்கள் என்பதையும் தொடர்ந்து உலகுக்கு விளங்க வைக்க வேண்டும்.

நாட்டின் சொந்த மக்களை அரசாங்கமே எப்படிக் கொன்று குவிக்கிறது என்பதனை உலகுக்கு எடுத்துச் சொல்லவும் காணாமற் போவோர் விவகாரம் ஒரு படிக்கல்லாக அமைய வேண்டும்.

அடுத்து-

சொந்த மக்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்கும் இரண்டாவது உலக நாடு (நைஜீரியாவுக்கு அடுத்து) இலங்கைதான் என்பதையும் உலகுக்கு உணர்த்த இதிலிருந்து வழி பிறக்க வேண்டும்.

உண்மை உறங்காது என்றோ ஒரு நாள் அது உலகை விழித்துக்கொள்ளச் செய்யும். உண்மையை வெளிக்கொணரும் வரை, அஞ்சாமை—மன உறுதி இருந்தால் இலட்சியத்தில் வெற்றி காணலாம்.

இந்தப் பொதுவான தத்துவம் இப்போது ஈழத் தமிழருக்கு மிகவும் பொருந்தும். வேதனைகள், சோதனைகளைத் தாங்கும் இதயம் வேண்டும். இழப்புக்களைக் கண்டு மனம் தளராத—அஞ்சாத உறுதி வேண்டும். அதனை ஒவ்வொரு ஈழத் தமிழனும் மனதில் நிலைநிறுத்துவதே இன்றைய முக்கிய தேவை.

## உதயன் ஞாயிறு விவரணச் சிறப்பம்சம்

# இலங்கை அரசை ராஜீவால் வழிக்கு கொண்டு வரவே முடியாதா?

## வீரமணி கேட்கிறார்

சென்னை,பெப் 7

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எதுவும் செய்ய இயலாது என்று கைவிரிப்பதுதான் பிரதமரின் வேலையா?

திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீரமணி அண்மையில் விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பி உள்ளார்.

அந்த அறிக்கை விவரம் வருமாறு;-

பிரதமர் ராஜீவ் அவர்கள் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்துப் பேசுகையில் சமரச திட்டத்தை பொறுத்தவரை இலங்கை அரசுக்கு ஒரு நிலையான கொள்கையில்லை. திடீர்திடீர் என்று மனமாற்றம் ஏற்படுகின்றது- இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரை உங்களைப் போலத்தான் நானும் ஏமாற்றம் அடைந்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில்ஜெயவர்த்தன அரசு எப்படி இரட்டைக் குரலில் இரட்டை வேடத்தில் நடித்துக் கொண்டுள்ளது என்ற மிகச்சாதாரண உண்மையை புரிந்து கொள்ளப் பிரதமர் ராஜீவ் அவர்களுக்கு இவ்வளவு நாள் பிடித்திருக்கிறது

### சொந்த மக்களைக் கொல்லும் அரசு

சொந்த நாட்டுக் குடிமக்கள் மீதே விமானம் மூலம் குண்டு வீசிக் கொலை உலகில் வேறு எந்த நாடு துணிந்து நடந்து கொண்டிருக்கிறது?

இதை எதிர்த்து வெறும் வாயால் கண்டனம் தெரிவித்து "ஏமாற்றம் அடைந்துள்ளேன் உங்களைப் போல்"— என்று செய்தியாளர்களைப்பார்த்துக் கூறுவது என்றால் இதை மனமிச்சலாத செயல் என்பதா? கையாலாகாத்தனம் என்பதா? இந்தியாவின் சுய மரியாதைக்கு இலங்கையரசு விட்ட சவால் என்று நினைக்கவேண்டாமா?

இலங்கைத் தமிழர்கள் நாட்டால் வேறுபட்டாலும் உணர்வால், கலாசாரப்பிணைப்பால் இந்திய வம்சாவழித் தமிழராக அடங்குவர் என்பதில் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய அறவழிப்பட்ட மகத்தான பொறுப்பு இந்திய அரசுக்கு இருப்பதை பிரதமர் ராஜீவ்காந்தி ஏன் தட்டிக்கழிக்கிறார்?

### 24 மணி நேரத்தில்

மனமிருந்தால் 24 மணி நேரத்தில் இலங்கை அரசினை வழிக்குக் கொண்டு வர முடியலாமே?

பிரதமரின் இந்தப் பதில் மூலம் உலகம் என்ன தெரிந்து கொள்ளும்--

1. இதில் அவருக்குப் போதிய அக்கறை, உண்மையான கவலை இல்லை என்று தானே எளிதில் புரிந்துகொள்ளும்!

2. இலங்கைத் தமிழர் பிரச்சினையை இனிப் பேச்சுவார்த்தை நாடகம் மூலம், அரசியல் தீர்வு மூலம், இலங்கை அரசை வைத்துத் தீர்த்திட முடியாது என்ற மன்போன்ற உண்மையை இவர் உணர்ந்து கொண்டார் என்பதல்லாமல் வேறு என்ன?

### தலையாட்டும் பொம்மை

தமிழகத்தில் உள்ள மாநில அரசோ, டில்லி என்ன சொல்லுகிறதோ அதற்கு தலையாட்டிடும் அரசாங்கமாகவேஇருக்கிறது. முதுகெலும்போடு நியாயத்தை எடுத்துச் சொல்லி பிரச்சினைக்கு உண்மையான பரிகாரம் காணும் அரசாக அது இல்லை.

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் சகோதரர் நெடுமாறன் அவர்கள் உருப்படியான யோசனையை இந்திய அரசுக்கு தமது அறிக்கை மூலம் தந்துள்ளாரே!

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு கப்பல் மூலம் ஏற்றுமதியாகும் எல்லாவித பொருள்களையும் உடனடியாகத் தடுத்து நிறுத்திட வேண்டும்.

தென் ஆபிரிக்காவுக்கு பொருளாதாரத் தடையைச் செய்யச் சொல்லி இங்கிலாந்தை வற்புறுத்தும் பிரதமர் ராஜீவ் காந்தி, ஏன் இந்தக் குறைந்தபட்ச மனிதாபிமான நடவடிக்கையை எடுக்கக் கூடாது?

இவ்வாறு திரு. வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(அ-ஐ)

## பனை வளத்தை பாதுகாப்போம்

பனையை வளர்த்துப் பயனைப் பெறுவோம் என்ற வாசகம் இன்று பனையைத் தறித்துப் பயனைப் பெறுவோம். என்று மாறிவருகிறதா?

யாழ் குடாநாட்டில் உள்ள பல மூலவளங்களில் பனை வளமும் ஒன்று. இது அதிகளவு அன்னியச் செலாவணியைத் தரக்கூடிய மூலவளம்.

இன்று குடாநாட்டில் பனை வளத்தின் மேம்பாட்டுக்கென பல சங்கங்கள், தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆனால் பனைவள அபிவிருத்தித் தொழிலில் ஈடுபட இளைஞர்களோ யுவதிகளோ முன்வருகிறார்கள் இல்லை என்பது மிகுந்த கவலைதருவதாக அமைகின்றது.

### தன்னிறைவு

இன்று எமது பனை வளத்தை நாம் நல்ல முறையில் பயன்படுத்தி வருவோமானால் எம் மக்களுக்கு தேவையான சீனி, சாராயம், பதநீர், உட்பட பல கைப்பணிப் பொருள்களிலும் நாம் தன்னிறைவு காணமுடியும்.

இதனை ஊக்குவிக்கு முகமாக வடமாகாண தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சமாசம் பல திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது.

எமது தமிழ் பிரதேசத்தின் முக்கிய மூல வளங்களில் ஒன்றான பனை வளம் பூரணமாகப் பயன்படுத்தப்படாததும் இம் மூலவளத்தை தமது வாழ்வுக்கு நம்பியிருக்கும் பனைத் தொழில் வல்லுநர்களின் பொருளாதாரம் மேம்படுத்தப் படாததும் கவனத்தில் எடுக்கப்பட்டு பின்வரும் நோக்கங்களை நிறைவு செய்யும் அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன

✶ பனைவளம் முழுவதையும் இயலுமான வரை பயன்படுத்தி எமது பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

பனைத் தொழிலையே ஜீவனோபாயத்திற்கு நம்பியிருக்கும் தொழிலாளர்களின் வருமானத்தை உச்சமாக்குவதுடன் சகல தொழிலாளருக்கும் சமமான ஊதியம் பல் அற்ற விலைக்கொள்கையை நிர்ணயித்தல்.

✶ தொழிலாளர்களிடம் இருந்துகொள்வனவு செய்யப்படும் கள்ளு பதநீர் போன்றவற்றுக்கு சந்தை வாய்ப்புக்களை அதிகரித்தல்.

✶ சந்தைப் படுத்த முடியாத மேலதிகஉற்பத்திகளை விஞ்ஞான முறையிலான மாற்று செய்முறைகள் மூலம் புதிய உற்பத்திகளுக்கு பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்கலாம்.

பனம் தொழிலில் சம்பந்தப்பட்ட பொருத்தமான பயிற்சி அளித்தல், வினைத்திறமையை அதிகரித்தல் ஒரே சீரான சம்பள அளவுத் திட்டங்களை அமுல்படுத்துதல்.

சகல தொழிலாளர்களுக்கும் அவர்களால் இயலக் கூடிய அளவு தொழில் செய்ய வசதி அளிக்கப்படும்.

பனந்தொழில் வல்லுநர்களால் எடுக்கப்படும் கள்ளு, பதநீர் போன்ற வற்றினை விற்பனை மிகுதியில் இருந்து எடுக்கப்படும் கள்ளு, பதநீர் போன்றவற்றை வீணாக்காமல் மாற்று உற்பத்திகளில் பயன்படுத்த நடவடிக்கையும் எடுக்கப் [illegible]

### க. இரத்தினராஜசிங்கம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சாட்டுக்கு மேலதிக பிரெஞ்சு படை

பாரீஸ், பெப். 7

சாட் நாட்டின் மேற்குப் பகுதியில் லிபியத் தாக்குதலைச் சமாளிக்க பிரெஞ்சு அரசு மேலும் தனது படைகளை அனுப்பியுள்ளது.

மேலதிக துருப்புக்களுடன் யுத்தவிமானங்களையும் அனுப்பியுள்ளது என்ற தகவலை பிரெஞ்சு அரசு ஒப்புக்கொண்டது.

(இ-எ)

# கூர்க்காலந்து கோரிக்கையை கைவிட மாட்டோம்

## சுபாஷ் கிஷிங் கூறுகிறார்

டார்ஜிலிங், பெப் 7

கூர்க்காலந்து கோரிக்கையை நாம் கைவிட மாட்டோம்.

கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணித் தலைவர் திரு. சுபாஷ் கிஷிங் இதனைத் தெரிவித்தார்.

போராட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டதன் காரணம், பேச்சுக்கள் நடத்துவதற்கான சூழ்நிலை ஒன்றை உருவாக்கவே - இப்படி திரு. கிஷிங் மேலும் சொன்னார்.

எதிர்வரும் மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலில் கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணி போட்டியிடுமா?

என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், அது பற்றித் தீர்மானிக்கப்படவில்லை என்று திரு. கிஷிங் சொன்னார்.

(இ-எ)

## வெளி உலகில்

### நிதி மந்திரிகள்

வாஷிங்டன், பெப். 7

5 நாடுகளின் நிதி அமைச்சர்கள் பாரிஸில் இம்மாதம் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் கூடுகின்றனர்.

டாலரின் மதிப்பு வீழ்ச்சி அடைந்து வருவது சர்வதேச சந்தை வெளிநாட்டுச் செலாவணி ஸ்திரமற்ற நிலையில் இருப்பது-- இக்காரணங்கள் பற்றி விவாதிக்கவே இம்மாநாடு நடைபெறவுள்ளது

# கைதாவோர் சித்திரவதை செய்யப்படுவது உலக நாடுகளில் அதிகரித்து வருகின்றது

ஜெனீவா, பெப்.7

அரசப் படைகளினால் கைது செய்யப்படுபவர்கள் கடுமையாகச் சித்திரவதை செய்யப்படுவது உலக நாடுகளில் அதிகரித்து வருகின்றது-

இப்படி ஐ நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது.

"ஆணைகுழு நியமித்த 5 உறுப்பினர்கள் கொண்ட உபசெயற்குழுவே இந்த முறைப்பாட்டை அறிக்கை ரூபத்தில் சமர்ப்பித்துள்ளது.

இந்த செயல் குழு 39 நாடுகளின் அரசியல் கடத்தல்கள், காணமற் போனவர்கள்பற்றி விசாரித்தபின்னர் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

39நாடுகளில் இலங்கையும் ஒன்று.

அரசுப் படைகளினால் கைது செய்யப்பட்ட பின்னர் காணமற் போனவர்கள் எண்ணிக்கைபற்றி செயற்குழு தனது அறிக்கையில்விவரித்துள்ளது அவ்விவரம் வருமாறு;

ஆர்ஜென்டீனா 3,368
கௌதமாலா — 2,630
எல்-சல்வடோர்—2,060
பெரு — 1,155.

இவை எல்லா லத்தின் அமெரிக்க நாடுகள்.

இலங்கையில் 326பேர் காணமற் போய்விட்டதாக கூறப்பட்டுள்ளது.

(இச்செய்தி 6 - 2 - 87 உதயனில் வெளி வந்தது தெரிந்ததே )

சித்திரவதை பற்றிய அறிக்கையில் நெதர்லாந்து நாட்டுப் பேராசிரியர் பீட்டர் கூஜிமான்ஸ் கூறியிருப்பதாவது;

சித்திரவதை என்ற கொடுமையில் இருந்து மக்களைப் பூரணமாகப் பாதுகாக்க முடியாதநிலை நிலவுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் மனிதன் நாளாந்தம் சித்திரவதைக்கு ஆளாகும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.

சிலஅரசாங்கங்களின்கட்டுப்பாட்டைமீறி ஆயுத படைகள் இயங்குகின்றன. ஆயுத படைகள் படைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாத அரசாங்கங்கள் தேசிய நலன்,பாதுகாப்பு என்ற சாட்டுக்களைக்கூறி சித்திரவதைகளைச் சட்டபூர்வமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

கெரில்லாக் கிளர்ச்சியாளருடன் மோதும் அரசுப்படைகள் கைதிகளை துன்புறுத்தி சித்திரவதை செய்கின்றனர். [illegible] கண்டித்தாலும் பாதுகாப்புக் காரணங்கள் கருதி கண்டுகொள்ளாமல் [illegible]

சித்திரவதைகள் இடம் பெறவே இல்லை என்று சாதிக்கின்றன. தீவிரவாதிகளின் செயல்கள் காரணமாகத்தான் சித்திரவதைகளில் அரசப் படைகள் ஈடுபடுகின்றன என்று நியாயமும் கற்பிக்கின்றன-

இப்படி அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

கிளர்ச்சிக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களில் வாழும் குடிமக்களையும் அரசப் படைகள் சித்திரவதை செய்து, கிளர்ச்சிக்காரர்கள் பற்றிய தகவல்களைப் பெறுகின்றன.

இரு தரப்பினருக்கும் இடையே அதிகரித்து வரும் தாற்றுதல்கள் வன்செயல்களைத் தொடராகச் செயல்படுத்துவதற்கு இடமளிக்கின்றன இது கடுமையான சித்திரவதை நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

உப செயற்குழு சமர்ப்பித்த அறிக்கையும் சித்திரவதை பற்றி நெதர்லாந்து பேராசிரியர் சமர்ப்பித்த அறிக்கையும் ஐ நா மனித உரிமை ஆணைக்குழுவின் 6 வார காலக்கூட்டத்தொடரில் விவாதத்துக்கு வர உள்ளன என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

48 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் கடந்த 2 ஆம் திகதி திங்கள் ஜெனிவாவில் ஆரம்பமானது.

(இ-எ)

## முதலில் இயேசுவிடம்!

### ஞானக்கதிர்

"அந்த சங்கதியை இயேசுவுக்கு அறிவித்தார்கள்" (மத்14:13)

பிரச்சினையா? கண்ணீரா? போராட்டமா? கர்த்தரிடம் முதலில் அதை அறிவி. தாங்க முடியாத வியாகுலமா? கிறிஸ்துவின் பாதத்திற்கு ஓடிச்சென்று உன் இருதயத்தை ஊற்றிவிடு முதலில் அவருக்கே உன் விண்ணப்பங்கள் தெரியட்டும்; அவரிடமே உன் பாரத்தை வை!

ஒரு போதகர் தன் மனைவியுடன் உலாவும்படிச் சென்றார். வழியில் ஓர் இளம் பெண் ஓடி வந்து அவர் பாதத்தில்விழுந்து 'ஐயா என் பிரச்சினையை என்னால் தாங்க முடியவில்லை. உங்களை எங்கு சந்திக்க முடியும் என்று எண்ணி ஓடி வந்தேன் ஐயா ஒரு பத்து நிமிடம் எனக்காக ஒதுக்குவீர்களா? என் காரியங்களையெல்லாம் உங்களிடம் கொட்டினால்தான் ஆறுதல் கிடைக்கும்' என்றாள்.

போதகர் அமைதியாகச் சொன்னார், "அம்மா பத்து நிமிடமில்லை ஒரு மணி நேரமானாலும் உன் பிரச்சினைகளை நான் பொறுமையோடு கேட்கத் தயார். ஆனால் என்னிடம் சொல்ல விரும்புகிறவைகளை நீ கிறிஸ்துவிடம் முன்பே சொல்லிவிட்டாயா? அல்லது



அவரது பாதத்தில் உன் வியாகுலங்களை ஊற்றிவிட்டாயா? அவர்தான் உன் ஜெபங்களுக்கு பதிலளிப்பவர். நீ என்னிடம் கூறுவதால் உன் மனச்சுமை இறங்கலாம், ஆனால் ஜெபத்துக்குப் பதில் தந்து ஜெபத்தைக் கட்டளையிடுபவர் கிறிஸ்துவே! முதலில் அவரிடம் அறிவி. பின்பு வந்து என்னிடம் கூறு' என்றார்.

அநேகர் அந்த இளம் பெண்ணைப்போல்தான், பிரச்சினை வந்தவுடன் கர்த்தரிடம் சொல்லா [illegible]



## பொன்மொழி

குறள்:

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

பொருள்:

வரவேண்டிய துன்பங்கள் வந்து வருத்தாமல் நீங்குமானால், நுகரும் பொருள் இல்லாத வறியவர் துறவறம் மேற்கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
Commencement 24th January
வகுப்புகளும், செய்முறைகளும்
பாதுகாப்பான இடத்தில்
60 மணித்தியாலங்களுக்கு குறையாத
Practicals
பயிற்சி, முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
வெளிநாடு செல்பவர்களுக்கோர் வரப்பிரசாதம்
Cantabia Institute
21, Main Street, Jaffna, Phone: 24204
13, Rasavinthodam Lane, Jaffna.

# உதயன்

08 - 02 - 1987 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
6 Months
Weekend Classes
Fees: Rs 1500/-
Commencement 24th January 1987
JOIN THE LEADERS
Cantabia Institute
21, Main Street, Jaffna. Phone: 24201
13, Rasavinthodam Lane, Jaffna.

## விசித்திரம்

வாரும் முரளியார், இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. சந்தைப் பக்கம் போயிருப்பீர். எப்பிடி காய் கறி விலை ஏறி விருக்கோ அல்லது இறங்கியிருக்கோ...?

நானும் நேற்றுச் சந்தைப் பக்கம் போனேன். ஆனா மலிஞ்ச மரக்கறி வெங்காயப்பூதான். ஒருபிடி ஐம்பது சதம் போகுது. வடமராட்சிப் பக்கத்திலை வெங்காயப் பூவை கால்நடையள் சாப்பிடுதாம். அந்தளவுக்கு இந்தமுறை வெங்காயம் விளைஞ்சிருக்கு. ஆனா கொழும்புச் சந்தையைத்தான் உவை மூடிவிட்டினமே.

பொதுவாய் மற்ற மரக்கறிகளும் கொஞ்சம் விலை இறங்கி இருக்கு. பயிற்றங்காய், பாவக்காய், தக்காளி, பூசணிக்காய், கத்தரிக்காயைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

வாங்கிச் சாப்பிடுற நாங்கள் விலை குறைஞ்சது சந்தோஷப்படுவோம். ஆனா உற்பத்தி செய்யிற விவசாயிகளை நினைச்சால் அதுவும் உந்த எண்ணெய் விலை ஏத்தத்துக்கை.

தேங்காய்தான் கொஞ்சம் ஏறி இருக்கு. தேங்காய் மட்டுமில்லை மினிபஸ் கட்டணங்களும் நாளுக்கு ஒவ்வொண்டாக உச்சத்துக்குப் போகுது. முந்தி ஒரு இடத்துக்குப் போய் வாறதுக்கு எடுத்த காசு, இப்ப ஒரு வழிக்குப் போகவும் போதாமல் இருக்கு.

அவர் அச்சாணியாருக்கும் எரிபொருள் தடையை நீக்கிற எண்ணம் இல்லை. கொஞ்ச நாளைக்கு இறுக்கிப் பாப்போம். உவை என்ன செய்கினம் எண்டதைப் பாக்கலாம் எண்டு யோசிச்சிட்டார்.

நாங்களும் கொஞ்சம் அனுபவிச்சுப் பாப்போம் எண்டு அனுபவிக்கவேண்டியதுதான் அதைவிட வேறு வழியில்லை,

இந்தியா இப்ப தான் எரிபொருள் தடை விதிச்சது குறித்து உத்தியோக பூர்வமாய் கவலை தெரிவிச்சிருக்கு ஜ ர வரி இரண்டாம் திகதி போட்ட எரிபொருள் தடை சம்பந்தமாய் கவலை தெரிவிக்கவும் திபந்தனை விதிக்கவும் இஞ்சை கிழமை தேவைப்பட்டிருக்கு ஆனைகூடக் கொஞ்சம் வேகமாய் நடக்கும். இலங்கை விஷயத்திலை இந்தியா ஆனை விடச் சிலோ!

சிலோன் விஷயத்திலை சிலோவாய்ப் போறது தான் நல்லது எண்டு பைலட்டார் யோசிக்கிறாரோ. உண்மையிலை அவர் இதிலை கவனம் வைச்சால் விமானவேகத்திலை எல்லோ அலுவல் நடக்கவேணும்! பைலட் ஒருவர் நத்தையாய் மாறியிருப்பதிலை உள்விஷயம் இல்லாமல் இராது வீரமணி சும்மா வீரத்துக்காகச் சொல்லியிருக்கமாட்டார்.

* * *

உந்தச் சுவிஸ் அரசாங்கத்தை சிலோன் அரசாங்கப் புலியன் நல்லாய் மயக்கிப்போட்டிடினம் போலை.

இல்லாட்டில் வல்வெட்டித்துறை இளைஞன் துரைராசாவை அவை கொழும்புக்கு அனுப்ப வேண்டிய அவசியம் என்ன?

அவர் சுவிட்சர்லந்தில் தஞ்சம் கோரவுமில்லை. நேர்வேயிலை இருந்தவர். இந்தியாவுக்குப் போக இருந்தவரைக் கொழும்புக்குப் பலவந்தமாய் அனுப்ப எந்தச் சர்வதேசச்சட்டம் இடம் குடுத்தது எண்டு தெரியயில்லை!

சுவிஸுக்குப் போன தமிழ் இளைஞரை அந்த நாட்டு அரசு திருப்பி அனுப்புது. இஞ்சை தமிழருக்குப் பாதுகாப்புப் பயமில்லை எண்டு சொல்லுது.

அங்கை இருந்து அனுப்பின ஏழுபேர் போன கிழமை இஞ்சை வந்து சேர்ந்ததாய் ஒருகேள்வி

இதற்கிடையிலை சுவிஸ் பத்திரிகைக்காரர் இரண்டுபேர் யாழ்ப்பாணத்திலை நிக்கினம். அவை யாவது தமிழர் படுற பாட்டை, உண்மைநிலையைப் போய் எழுதினால் நல்லது.

கொண்டோடி

## பலாலி சிப்பாய் தற்கொலை

கொழும்பு, பெப், 8

பலாலிஇராணுவமுகாமில், இராணுவ சார்ஜட் அபயரத்ன பண்டார திஸநாயக்கா தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இடமாற்றம் கோரி அனுப்பிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர் தற்கொலை செய்து கொண்டதாககொழும்பில் நடந்த மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

லேடன் காமென்ஸ்
249, மின்சார நிலைய வீதி,
(த பிஞன்ஸ் கொம்பனி கட்டடம்,
ஆஸ்பத்திரியின் பின்பக்கம்)
யாழ்ப்பாணம்.
★ லேடன் தயாரிப்புக்கள்
★ போம் சூட்கேஸ்
★ பேபி சூட்டிங் வகைகள்
★ றெடிமேட் சேட்
★ சூட்டிங்
★ கவுண் வகைகள்
★ பலவர்ணச் சாறிகள்
மற்றும்
சகல விதமான துணித் தேவைகளுக்கும்
நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்
லேடன் காமென்ஸ்
★ நிதானவிலையில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 – ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 0 8 – 02 – 1987 தொலைபேசி இல. 24805, 23078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15 Second Lane, Power House Road, JAFFNA Registered as a News-paper at the General Post Office. Sri Lanka Under Number QJ. 60 N 86 Telephone. 24805.

# மீனவர்களுக்கும்

# தொழில் முறைப் பயிற்சி

# அளிக்க வேண்டும்

## கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், பெப் 8

மீனவர்களும் தொழில் முறைப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புகளைச் செய்துகொடுக்க வேண்டும்

கலாநிதி கா. ரூபமூர்த்தி இவ்வாறு கூறினார்.

'ஆய்வு நிறுவனம்' நேற்று யாழ் பல்கலைக் கழகத்தில் நடாத்திய 'எமது பிரதேசத்தின் மீன் உற்பத்தியும் பயன்படுத்தலும்' எனும் கருத்தரங்கிற்கு தலைமை வகித்து அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில், அரசாங்கம் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதில் எமது பிரதேசத்தைப் புறக்கணித்தே வந்துள்ளது.

வேறு பகுதிகளில் இத்தொழிலை நவீனமயப்படுத்துவதில் கடன் வசதிகளும் தொழில் நுட்ப ஆலோசனைகளும் வழங்கியுள்ளது என்றார்.

கரையோர மீன்பிடி பற்றி திரு. சி. தவரத்தினம் உரையாற்றுகையில் கூறியதாவது:-

மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் கடற்றொழிற் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவேண்டும்.

ஜப்பானில் உள்ளது போல் அவர்களைக் கடற்றொழில் நிபுணர்களாக உருவாக்கவேண்டும்

மீன் அதிகமாகப் பிடிக்கப்படும் மழை காலங்களில், சூரிய வெளிச்சம் இன்றி வேறு வகையில் கருவாடு உற்பத்திக்கான நவீன உத்திகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்

மீன் உற்பத்திபற்றி திரு. இ. கணேந்திரன், திரு க பசுபதிப்பிள்ளை, திரு. சோ. சாம்பசிவம் ஆகியோர் உரையாற்றினர்,

மீனைப் பயன்படுத்தல், பதப்படுத்தல் பற்றி திரு. லோ. ப. பிலிப், திரு. க சரவணமுத்து, திரு பே அருள் மரியதாஸ் ஆகியோர் உரையாற்றினர்

கருத்தரங்கிற்கான ஒழுங்குகளை யாழ் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தினர் ஆய்வு நிறுவனத்தினருடன் இணைந்து செய்திருந்தனர். (இ-5)

## தெற்கிலிருந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குதலில் மேலும் ஆறு சிப்பாய்கள் பின்னர் கொல்லப்பட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

சிலர் கை, கால்களை இழக்கும் அளவுக்குப் பலத்த காயங்களுக்கு உள்ளாகிஇருக்கலாம்என்றும் கூறப்படுகிறது.

### வீடுகள் எரிந்தன

குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் பல வீடுகள் எரியுண்டதாகவும், பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அஞ்சப்பட்டது

கடந்த வாரம் அளவில் அனுராதபுரம் பகுதியில் இருந்து வவுனியா வந்த சிப்பாய்கள் மாங்குளம் இராணுவ முகாமில் தரித்து நின்றனர்.

பின்னர் கிளிநொச்சி முகாமுக்கு வந்து சேர்ந்தனர்

கிளிநொச்சி முகாமில் இருந்து நேற்றுப் புறப்பட்ட சிப்பாய்கள் உருத்திரபுரம்பகுதியில் முகாம் அமைக்க முற்பட்ட போதே அவர்களுக்கும் புலிகளுக்கும் கடும்போர் நடந்தது (ஆ-10)

## பாடசாலை இடமாற்றம்

யாழ்ப்பாணம்,பெப் 8

கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம் நாளை முதல் நாவலர் மகா வித்தியாலயத்தில் இயங்கும்.

இதற்கான அனுமதியை யாழ்-மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம் மன்சூர் வழங்கினார்.

கொட்டடிப் பகுதியில் தொடர்ந்து நடந்து வரும் ஷெல் தாக்தல் காரணமாக ஒரு மாதத்துக்கு மேலாக இப்பாடசாலை இயங்காமல் இருக்கிறது.

ஏற்கனவே நகரில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு இப்பாடசாலை ஏற்கனவே மாற்றப்பட்ட போதிலும் பெற்றோர்கள் அதனை விரும்பாதபடியால் அது கைவிடப்பட்டது

இதனை அடுத்து நாவலர் மகாவித்தியாலயத்தில் இப்பாடசாலையை தற்காலிகமாக இயங்கச் செய்வதற்கு முடிவு எடுக்கப்பட்டது.

மனோகரா தியேட்டரில் பாடசாலையை தற்காலிகமாக நடத்துவது குறித்து திட்டமிடப்பட்டதாயினும் அந்த முடிவு கைவிடப்பட்டு நாவலர் பாடசாலையில் நடத்த இவ்வாறு தீர்மானிக்கப் பட்டுள்ளது: (இ-10)

## முதலில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வதை விட்டு விட்டு, எந்த வழியரிடம் ஓடலாம்? எந்த தீர்க்கதரிசன வரமுடையவரை நாடலாம்? யாருக்குக் கடிதம் எழுதலாம் என்று அங்கலாய்க்கிறார்கள். நல்லதுதான், ஆனால் முதலில் கர்த்தரைத் தேடு!

''நான் கர்த்தரைத் தேடினேன். அவர் எனக்குச் செவி கொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார்''

## பனை ....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

### மதுசாரம்

மேலதிக உற்பத்திகள் மூலம் பெறப்படும் செறிவு குறைந்த மதுசாரத்தைதரமானசாராயமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு சங்கங்களுக்கு உதவுவதற்கு திக்கம் சாராய வடிசாலையின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இந்த உற்பத்திகள் மூலம் கிடைக்கப்பெறும் மதுசாரம் குடாநாட்டில் உள்ள மக்கள் பாவனைக்கு விடப்படும்.

தென்னிலங்கையில் இருந்து வடபிராந்தியத்துக்கு கொண்டு வரப்படும் ஒரு லட்சத்து இம் பதினாயிரம் லீற்றர் மதுசாரம் இந்த உற்பத்திகள் மூலம் நிறுத்தப்பட

## அடிப்படை...

(8ம்- பக்கத்தொடர்ச்சி)

தொடர்ந்து பேசுகையில் சுகவாழ்விற்கு உத்தரவாதம் அளிக்கும் போது தான் வருங்கால சமுதாயத்தை வலுவுள்ள வல்லமையுள்ள தாக்கமான முடியும்

சிறுவயதில் இருந்தே சுகத்துக்கு ஏதுவான பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளச் செய்வதுடன் போஷாக்கு உணவு உட்கொள்ளவும் வழி செய்யப்பட வேண்டும் என்றார்.

கருத்தரங்கு தொடர்பான ஒழுங்கைக் குறித்துப் மரியாறல்களும் இடம்பெற்றன.

## நெல்லியடியில் "வாழுங்கள் வாழவிடுங்கள்"

யாழ்ப்பாணம், பெப் 8

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கலாசார கூட்டுறவுப் பெருமன்றத்தின் ஆதரவில் விஞ்ஞானக் கல்வி விவரணத் திரைப்படமான வனவிலங்குகள் சம்பந்தப்பட்ட 'வாழுங்கள் வாழவிடுங்கள்' என்ற வீடியோ படக்காட்சி நெல்லியடியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிமனை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்

இந்தப்படம் உள்ளூரில் தயாரிக்கப்பட்டது ஆகும். (இ)

## உள்ளூராட்சி ஓய்வூதியர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப் 8

ஆயுள்வேத மற்றும் உள்ளூராட்சி ஓய்வு ஊதியம் பெறுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை பத்துமணிக்குயாழ் மாநகர இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கணேசானந்தா ஸ்ரோர்ஸ் கட்டடத்தில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். (ஒ)

## சிப்பாய்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன் தினம் சிப்பாய்கள் புலிகளுடன் சமர் செய்த பகுதியில் சிப்பாய்கள் சார்பில் காயமடைந்த, உயிரிழந்தவர்களது இரத்தக் கறைகள், விட்டுச் சென்ற பொருள்கள் என்பவற்றைப் பார்வையிட நேற்று அந்த இடத்துக்கு பொதுமக்கள் பலர் சென்றனர்.

இவர்களில், சுந்தரலிங்கமும். பாலசுப்பிரமணியமும் சிப்பாய்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டை இயக்கும் பொறிகளில் மிதித்துவிட்டனர்

பாரத்தில் வெடிக்கும் குண்டு அது ஆகும். சுந்தரலிங்கம் தனது வலது காலை இழந்தார்.

அவருக்கு அண்மையில் நின்றிருந்த பாலசுப்பிரமணியம் தலையிலும் கையிலும் படுகாயமடைந்து விழுந்தார்

குண்டுச் சத்தம் கேட்டு அவ்விடத்துக்கு விரைந்த போராளிகளும், பொது மக்களும் இருவரையும் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் சேர்த்தனர். (இ-119)

## பனைவெளி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மறைந்தும் படுத்தும் கொண்டனர்.

பிற்பகல் 5 மணிவரையும் திரும்பிச் செல்லாத சிப்பாய்கள் புலிகள் தாக்குதலுக்குத் தயாராக நிற்பதை சீப்ளேன் மூலம் வேவு பார்த்து முகாமுக்குத் திரும்பினர்.

செய்தி எழுதும்வரை முன்னேறுவதற்கான எதுவித முயற்சியையும் சிப்பாய்கள் மேற்கொள்ளவில்லை.

எனினும் முகாமில் இருந்தவாறு ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

ஷெல் குண்டுகள் புதுரோட்டுக்கு அண்மையில் உள்ள 'சென்றி'க்கு அண்மையிலும் வடக்குப் புன்னாலைக் கட்டுவன் சந்திக்கு அண்மையிலும் விழுந்து வெடித்தன.

போராளிகளுக்கோ பொது மக்களுக்கோ காயம் எதுவும் ஏற்பட

## காவலூரை நோக்கி ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம்,பெப்.7

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து ஊர்காவற்றுறைப் பகுதியைநோக்கிஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வியாழக்கிழமை இச்சம்பவம் நடந்தது

இதேவேளை கைதடி பாலத்துக்கு மேலால் சென்று கொண்டிருந்த வாகனங்கள் மீதுநேற்றுக் காலைஹெலிக்கொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாயினும் எதுவித சேதமும் ஏற்படவில்லை. (இ-10)

## விமானத்தில் குண்டுப் பயமுறுத்தல்

கொழும்பு, பெப்.8

தொலைபேசி மூலம் விடுக்கப்பட்ட குண்டுப் பயமுறுத்தல் காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து பம்பாய் புறப்பட வேண்டியிருந்த எயர் லங்கா விமானம் 2 மணித்தியாலம் தாமதமாகவே புறப்பட்டது. (இ-எ)

## 19ஆக உயர்வு

கொழும்பு, பெப் 8

இரத்மலானைப் பகுதியில் கசிப்பு அருந்தியோரில் மேலும் நான்கு பேர் மரணம் அடைந்தனர்.

மரணம் அடைந்தோர் எண்ணிக்கை 19ஆக அதிகரித்துள்ளது. (இ–10)

## புத்தகக் கடையில் திருட முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 8

புத்தகக்கடை ஒன்றில் புத்தகங்களைத் திருட முயன்ற நபர் ஒருவர் கையும் மெய்யுமாகப்பிடிபட்டார்.

யாழ் பஸ் நிலையப் பகுதியில் உள்ள புத்தகக் கடை ஒன்றிலேயே நேற்று இச்சம்பவம் நடைபெற்றது.

பிடிபட்ட நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டார். (இ-10)

## திடீர் திடீரென அதிகரிக்கும் கட்டணம்

யாழ்ப்பாணம் பெப், 8

தினமும் மாற்றமடைந்து வரும் எரிபொருள் விலை காரணமாக குடாநாட்டில் தனியார் பஸ் கட்டணங்களும் திடீர் திடீரென அதிகரிகின்றன,

கட்டண அதிகரிப்புக் காரணமாக தினக்கள, அலுவலக, ஊழியர்கள் கடமைக்கு செல்வதில் தயக்கம் காட்டுகின்றனர்

தினமும் தாம் பெறும் சம்பளத்தைதவிட பஸ் கட்டணம் உயர்ந்துள்ளதன் காரணமாக கடமைக்கு வருவதில் பயனில்லை என பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்தார்

இதனிடையே நேற்று பெற்றோல் போத்தல் 60 ரூபாவாகவும் டீசல்போத்தல் 50 ரூபாவாகவும், மண்எண்ணெய்போத்தல் 28 ரூபாவாகவும் விற்கப்

## விளையாட்டரங்கு

## சுன்னாகத்தில் இன்று சம்பியன் போட்டி

சுன்னாகம், பெப் 8

இன்று ஞாயிறு மாலை 3-00 மணிக்கு சுன்னாகம் சிங்கமாப்பாணர் அரங்கில் உதைபந்தாட்ட 'சம்பியன்' போட்டி நடைபெறுகிறது.

உடுவில் "ஸ்போட் ஸ்ரார்" விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'சம்பியன்' தெரிவுக்காக கந்த ரோடை சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகமும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் இன்று மோதுகின்றன

இச்சுற்றுப் போட்டிகளில் மிகப்பலம் மிக்க கோஷ்டிகளான இவ்விரு கழகமும் மோதுவதைப் பார்ப்பதற்காக பெருந்திரளானோர் மைதானத்தில் கூடுவார்,

நேற்று முன்தினம் நடைபெற்ற அரைஇறுதி ஆட்டத்தில் கந்த ரோடை சிக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகமும் நாவலி செண் பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

பலத்த போட்டியின் இறுதியில் சிக்கோ டிஸ்கோ கழகம் 4-0 கோல்களால் வெற்றியீட்டி சம்பியன் போட்டியில்பங்கு பெற தகுதி பெற்றது

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு எஸ் ராஜேந்திரன் கடமை புரிந்தார்,

மற்றைய அரை இறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகத்தை 6 – 2 கோல்களால் வெற்றியீட்டி 'சம்பியன்' போட்டியில் பங்கு பெறும் தகுதியைப் பெற்றது (இ–27)

## இந்தியா 527 ஓட்டம்

சென்னை. பெப் 8

சென்னை டெஸ்ட்டில் இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 527 ஓட்டங்களை எடுத்தது.

யாதவ், மணிந்தர்சிங் ஆகியோர் முறையே 7, 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பாகிஸ்தான் அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 487 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. (இ எ)

## பிக்குகள் வடக்கே செல்ல வேண்டும் என்கிறார் மந்திரி காமினி

கொழும்பு, பெப். 8

வடபகுதிக்கு பௌத்த பிக்குகள் சென்று பிரிந்து வாழும் எண்ணத்தை கைவிடும்படி தமிழர்களைக் கேட்க வேண்டும்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா இப்படிச் சொன்னார்.

வெள்ளவத்தை பௌத்த வாலிபர் சங்கக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சிங்கள பௌத்தர்கள் தமிழர் பற்றி கொண்டுள்ள கருத்துக்களை வடபகுதி சென்று தெரிவிப்பதன் மூலம் பிரிந்து வாழும் எண்ணத்தை தமிழர் மனதில் இருந்து அகற்ற பௌத்த பிக்குகள் உதவ முடியும்—

இப்படி அமைச்சர் மேலும் சொன்னார். (இ-எ)

ஓராண்டு நினைவஞ்சலி



மாணிக்கம் குண்டுமணி

அன்னையின் மடியில்: 29 – 08 – 1949
ஆண்டவன் அடியில்: 19 – 08 – 1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை ஆதரித்து ஒளிபெறச்செய்து நீங்காத் துயரில் ஆழ்த்திவிட்டு எங்கையா சென்றீர்கள். மனைவிக்கு இதோ வருகிறேனென்று சென்றீரையா, திரும்பி வராமல் எங்கு சென்றீர். உயிரோடிருந்து செய்த உதவிகளை இறந்தாலும் செய்ய வேண்டுமென கூடவந்த அப்பாவியுடன் சென்றீரையா, பெரும் தியாகிகளுடன் நீரும் ஒருவராகிவிட்டீர் துரோகிகள் உன்னுடன் அழைத்தாய் எங்கு சென்றாலும் எம் நெஞ்சை விட்டு உங்கள் நினைவு அகலாதையா.

பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

யாழ். ரோட், பலாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org